# அவசர கூட்டப்பொருள்கள்

**1.** நகராட்சியின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதிமேலாண்மையை திறன்படுத்தவும் "தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி" என்ற பணியமைப்பு உருவாக்குவதற்கு நாகர்கோவில் நகராட்சி தீர்மான எண்.2735 நாள். 18.06.2013–ல் உரிய தீர்மானம் இயற்றி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பியுள்ளது. எனவே, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970 –ன் (Tamil Nadu Municipal General Service Rules 1970) விதி 1–ன் கீழ் இடம் பெற்றுள்ள

| | | |
|---|---|---|
| Class II | Category 2 | Accountants Special Grade and selection Grade Municipalities |
| Class IV | Category 2 | Assistant Accountants Special Grade and selection Grade Municipalities |
| | Category 5 | Accountants 1st Grade Municipalities |
| Class V | Category 2 | Accountants II and III grade Municipalities. |

ஆகிய நடைமுறையிலுள்ள கணக்குப்பணி தொடர்பான பதவிகளை தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970–லிருந்து நீக்கம் செய்திடவும் விதி எண் 3(b) –ன் கீழ்

Class II, வரிசை எண்.2–ல் குறிப்பிட்டுள்ள Accountants Special Grade and Selection Grade Municipalities

Class IV, வரிசை எண்.2–ல் குறிப்பிட்டுள்ள Assistant Accountants Special Grade and Selection Grade Municipalities

Class IV, வரிசை எண்.5–ல் குறிப்பிட்டுள்ள Accountants 1st Grade Municipalities

Class V, வரிசை எண்.2–ல் குறிப்பிட்டுள்ள Accountants II & III Grade Municipalities.

பதவிப் பெயர்களை நீக்கம் செய்திடவும் நாகர்கோவில் நகராட்சி மன்றம் தெரிவித்துக்கொள்கிறது.

கோப்பு எண்.9748/2013/சி1

**தீர்மானம் எண்: 596 – அங்கீகரிக்கப்பட்டது**

**2.** நாகர்கோவில் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 24 எண்ணிக்கையிலான இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில், ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தினை திரும்ப ஒப்படைத்து, அதற்குப் பதிலாக ஒரு கணக்கு உதவியாளர் (Accounts Assistant) பணியிடத்தினை இந்நகராட்சிக்கு புதிதாக உருவாக்கிட இந்நகராட்சி தனது ஒப்புதலை தெரிவித்துக்கொள்கிறது.

கோப்பு எண்.9748/2013/சி1

**தீர்மானம் எண்: 597 – அங்கீகரிக்கப்பட்டது**